

# வாரந்தோறும் ஒரு தீபம்!

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!**
(சங்கீதம் 119:105)

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**

**வியாழன்தோறும்**

| 17.07.2025 | **29. திருமண காலத்திற்கேற்ற ‘கீழ்படிதல்’ கற்றேன்!** |
|---|---|




**எ**ன் தந்தையின் நெருங்கிய உறவினரின் குடும்பத்தை சேர்ந்த ஒரு வாலிபன், ஸ்தாபன ஊழிய விஷயமாய் வீட்டிற்கு வந்து பேசிச் சென்றுவிட்டார். அவர் போன பின்பு அந்தப் பையனைக் குறித்த பரிசுத்த வாழ்க்கையை என் வீட்டார் எடுத்து கூறினார்கள். ‘அது எப்படியோ’ என் உள்ளத்தை கவர்ந்துவிட்டது..... அந்த கவர்ச்சி வெகுவான துக்கத்தையும் எனக்கு தந்துவிட்டது. அந்த நாள் முழுவதும் தேவனுக்கு முன்பாக அழுது முடித்தவுடன், ஆலயத்திலுள்ள பாதிரியாரிடம் ஓடோடிச் சென்று “குருகுலத்தின் தந்தையே, என் மனம் ஒரு பையனின் வரவால் அலைகழிக்கப்படுவதைக் கண்டு நான் வருந்துகிறேன். நான் இந்த கதியிலிருந்து இரட்சிக்கப்பட எனக்கு உதவுங்கள்” என கண்ணீரோடு வேண்டினேன். அவரோ, என்னை ஆச்சரியத்தோடு பார்த்து ஆறுதல் கூறினார்.

இவ்வாறு, என்னுடைய ஒவ்வொரு பின்மாற்றத்திலும் ‘தேவனிடம் ஓடோடிச் சென்று அறிக்கை செய்வதில்’ காலம் தவறாத கீழ்படிதலை நான் கற்றுக்கொண்டபடியால்.... தேவனோடு நான் கொண்டிருந்த விசுவாச வாழ்க்கை சீர்பெற்று வருவதைக் கண்டேன்.

*– (மேடம் குயான் வாழ்க்கை தீபங்கள்)*